# ஸ்ரீ ஜயேந்த்ர தயா தசகம்



श्रीजयेन्द्रदयाम्भोधिसमुद्भूतमहाघनाः ।
हिन्दुधर्मसभारूपाः भक्तिसस्यप्रपोषकाः ॥ १ ॥

காஞ்சீ பெரியவாள் ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்த்ர ஸ்வாமிகளுடைய தயை கடல்போல் விசாலமானது. அதில் தோன்றிய இந்து சமய மன்றங்களாகிய பெரிய மேகங்கள் பக்திப் பயிருக்கு நல்ல ஊட்டமளித்து உலகில் க்ஷேமத்தை ஏற்படுத்துகின்றன. 1

श्रीजयेन्द्रदयासिन्धुसमुत्थितकलानिधिः ।
हिन्दुधर्मसभाकारः भक्त्यौषधिविवर्धकः ॥ २ ॥

பெரியவாள் என்ற கருணைக் கடலில் தோன்றி வெளிப்பட்ட இந்து சமய மன்றம் என்ற சந்திரன் பக்தி என்னும் ஓஷதிகளைப் பெருக்கி வளர்க்கின்றது. 2

श्रीजयेन्द्रदयाब्धेर्या संभूता नवकामधुक् ।
हिन्दुधर्मसभानाम्नी भक्तिक्षीरप्रदायिनी ॥ ३ ॥

இந்து சமய மன்றம் என்ற புதியதொரு காமதேனு பெரியவாள் என்ற கருணைக் கடலில் உண்டானது. பக்தி என்னும் இனிய பால் தருவது. 3

श्रीजयेन्द्रदयापारपारावारादथोदितः ।
हिन्दुधर्मसभाकल्पवृक्षो दिव्यफलैर्युतः ॥ ४ ॥

காஞ்சீ பெரியவாளின் தயை எல்லையற்ற பெருங்கடல். அதிலிருந்து உண்டான இந்து சமய மன்றம் நல்ல பலன்களை (பழங்களை) நல்கும் கல்ப விருக்ஷம். 4

श्रीजयेन्द्रदयोदन्वज्जातचिन्तामणिर्नवः ।
हिन्दुधर्मसभारूपोऽद्भुतभक्तिधनप्रदः ॥ ५ ॥

பக்தி எனும் அத்புதமான செல்வத்தை நல்கும் இந்து சமய மன்றமெனும் சிந்தாமணி பெரியவாளின் கருணைக்கடலில் தோன்றியதேயாகும். 5

श्रीजयेन्द्रदयासागरोत्थितेयं नवा सुधा ।
हिन्दुधर्मसभारूपा जगज्जीवनकारिणी ॥ ६ ॥

இந்து சமய மன்றம் என்று ஓர் அமுது உலகை வாழ்விக்கவே ஸ்ரீ ஜயேந்திர ஸ்வாமிகள் என்ற நமது பெரியவாளின் கருணைக் கடலிலே புதிதாகத் தோன்றியிருப்பது. 6

श्रीजयेन्द्रदयावारिनिधौ नोत्पद्यते विषम् ।
हिन्दुधर्मसभारूपरत्नानामाकरोऽस्त्ययम् ॥ ७ ॥

பெரியவாள் என்ற கருணைக் கடலில் விஷம் தோன்றுவதே இல்லை. மாறாக இந்து சமய மன்றங்கள் என்ற ஏராளமான ரத்னங்களுக்கு இக்கடல் இருப்பிடம். 7

श्रीजयेन्द्रपयोराशिदयावीची सदा नवा ।
हिन्दुधर्मसभा एतास्तरङ्गास्तादृशा नवाः ॥ ८ ॥

பெரியவாள் கருணை ஸமுத்ரத்தில் இந்து சமய மன்றங்கள் போன்ற புதிய புதிய அலைகள் நிறைய உண்டு. 8

श्रीजयेन्द्रदयाक्षीरार्णवे जाता यशस्करी ।
हिन्दुधर्मसभालक्ष्मीरियं सेव्या सदा बुधैः ॥ ९ ॥

புகழைத் தேடித் தரும் இந்துசமய மன்றம் என்ற லக்ஷ்மியை அறிவாளிகள் ஸேவிக்க வேண்டும். இந்தத் திருமகள் தோன்றியது பெரியவாளின் கருணையாகிய பாற்கடலில். 9

श्रीजयेन्द्रदयाराशिः कुरुतेऽस्मज्जगद्गुरुः ।
हिन्दुधर्मसभाशङ्खध्वनिना विश्वमङ्गलम् ॥ १० ॥

ஜகத்குருவான நமது பெரியவாள் கருணைக்கு இருப்பிடம். இந்து சமய மன்றமென்னும் அவரது சங்கநாதம் உலகிற்கே மங்களத்தை அளித்துக்கொண்டிருக்கின்றது. 10